DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 250 of 2022 |
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | நாகேஷ் |
| Father's Name | : | முருகன் |
| Village | : | சிலேபள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | கூலி |
| Age | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 16th day of November 2024.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

முதல் விசாரணை :-

நான் தற்போது சிலேபள்ளி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த போன ஜமுனா எனது ஊர்க்காரர் ஆவார். அ.சா.1 வெங்கடப்பன் எனது ஊரைச் சேர்ந்தவர் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தேதி மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. காலை சுமார் 06.00 முதல் 07.00 மணி அளவில் எனது ஊரிலுள்ள டீக்கடையில் அருகில் இருந்தவர்கள் விபத்து குறித்து பேசிக் கொண்டிருந்தார்கள். பின்னர் விபத்து நடந்த தளவாய்ப்பள்ளி பஸ் நிறுத்தம் மற்றும் முனியப்பன் கோவில் எதிரில் சென்று பார்த்தேன். ஜமுனா ஆபத்தான நிலையில் கீழே விழுந்து கிடந்தார். அவரது குழந்தைகளும் அங்கே விழுந்து கிடந்தார்கள். அங்கே ஒரு ஈச்சர் வாகனம் நின்று கொண்டிருந்தது. அதன் பதிவு எண் தெரியாது. ஆஜர் எதிரி கூட்டத்தில் இருந்தாரா என்று நான் பார்க்கவில்லை. பட்டியல் சாட்சி 1 அந்த சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்தார். அவரிடம் எதுவும் நான் கேட்டு

தெரிந்து கொள்ளவில்லை. அதன் பிறகு அடிப்பட்டவர்களை ஆம்புலன்சில் எடுத்துச் சென்று விட்டார்கள். நான் கிளம்பி விட்டேன். நான் கிளம்பும் போது போலீசார் அங்கு வரவில்லை, போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

சம்பவத்தை கேள்விப்பட்டு தான் போனீர்கள் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

ஒம் /- திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.